**Previous Examination date – 10.06.2026**

**DEPOSITION OF WITNESS**

**(Chapter XXIII Code of Criminal Procedure**

**In the Court of the Judicial Magistrate, Palani.**

**C.C. 145 of 2022**

**Deposition of Witness P.W.5**

| | |
|---|---|
| **Name : முத்துக்கருப்பன்** | **Father/Husband's Name : சின்ன கருப்பன்** |
| **Village :** | **Taluk :** |
| **Caste :** | **Calling :** |
| **Religion :** | **Age :** |

**Solemnly affirmed in accordance with the provision of Act X of the Day of 18.06.2026.**

**A1 to A4 present.**

**முதல் விசாரணை**

1. நான் தற்போது அ.கலையம்புத்தூரில் குடியிருந்து கூலி வேலை செய்து வருகிறேன். ஆஜர் எதிரிகள் பாரதி, மருதை, சதீஸ், மணிகண்டன் ஆகியோர்கள் எனது பக்கத்துவீட்டுக்காரர்கள். அ.சா.1,அ.சா.2,அ.சா.3 எனது உறவினர்கள். 28.09.2021ம் தேதி இரவு 10.00 மணிக்கு அ.சா.1 வீட்டில் இருந்து அழகுநாச்சியம்மன்கோவில் அருகே அ.சா.1 சென்றபோது அடையாளம் தெரியாத 10 – 15 நபர்கள் அங்கு சண்டையிட்டு கொண்டிருந்தார்கள் என கேள்விபட்டேன். போலிசார் என்னை விசாரித்தார்கள்.

**(அரசு தரப்பில் சாட்சியை பிறழ்சாட்சியாக கருதி விசாரிக்க அனுமதி கோரப்பட்டு அது அனுமதிக்கப்பட்டதன் பேரில் அரசு தரப்பில் குறுக்குவிசாரணை)**

**அரசு தரப்பில் குறுக்குவிசாரணை**

2. கடந்த 29.09.2021ம் தேதி இரவு 10.00 மணிக்கு அ.சா.1 வீட்டில் இருந்தபோது ஆஜர் எதிரி பாரதி கதவை தட்டி வெளியே வாடா என அழைத்ததாகவும், பின்னர் அ.சா.1 எனக்கு சாப்பாடு கொடுப்பதற்காக அழகுநாச்சியம்மன்கோவில் அருகே சென்றபோது அங்கு நின்றிருந்த ஆஜர் எதிரிகள் அ.சா.1ஐ கையாலும், கல்லாலும் தாக்கிவிட்டு கீழே தள்ளிவிட்டு அடித்தார்கள் எனவும், அதில் அ.சா.1க்கு முதுகிலும், உடம்பிலும் காயம் ஏற்பட்டது எனவும், பின்னர் மேற்படி சண்டையை விலக்க நானும், அக்கம்பக்கத்தினரும் சென்றபோது ஆஜர் எதிரிகள் அ.சா.1க்கு கொலை மிரட்டல் விடுத்துவிட்டு தப்பியோடிவிட்டார்கள் எனவும், போலிஸ் விசாரணையின்போது

சொல்லிவிட்டு தற்போது ஆஜர் எதிரிகளுக்கு ஆதரவாக பொய் சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல. ஆஜர் எதிரிகளுடன் சமாதானமாக சென்றுவிட்டேன் என்றால் சரிதான்.

**எதிரிகள் தரப்பில் குறுக்குவிசாரணை**

3. இல்லை.

M PONPANDI
Digitally signed by M PONPANDI
Date: 2026.06.18 17:40:46 +0530

நீதித்துறை நடுவர்,
பழனி.

**Previous Examination date – 10.06.2026**

**DEPOSITION OF WITNESS**

**(Chapter XXIII Code of Criminal Procedure**

**In the Court of the Judicial Magistrate, Palani.**

**C.C. 145 of 2022**

**Deposition of Witness P.W.6**

| | |
|---|---|
| **Name : வேலுமணி** | **Father/Husband's Name : கந்தசாமி** |
| **Village :** | **Taluk :** |
| **Caste :** | **Calling :** |
| **Religion :** | **Age :** |

**Solemnly affirmed in accordance with the provision of Act X of the Day of 18.10.2025.**

**A1 to A4 present**.

**<u>முதல் விசாரணை</u>**

1. நான் தற்போது தாலுகா காவல்நிலையத்தில் சிறப்பு சார்பு ஆய்வாளராக பணிபுரிந்து வருகிறேன். வழக்கின் விசாரணை அதிகாரி சார்பு ஆய்வாளர் திரு.முரளி அவர்களுடன் பணிபுரிந்துள்ளேன். சார்பு ஆய்வாளர் திரு.முரளி அவர்களின் கையொப்பம் எனக்கு நன்கு தெரியும். திரு.முரளி தாலுகா காவல்நிலையத்தில் கடந்த 30.09.2021ம் தேதி நிலைய பொறுப்பில் இருந்த போது பழனி அரசு மருத்துவமனையிலிருந்து கிடைத்த தகவலின் அடிப்படையில் பழனி அரசு மருத்துவமனையில் சிகிச்சை பெற்று வந்த சண்முகவேல் என்பவரை விசாரித்து கொடுத்த வாக்குமூலத்தின் அடிப்படையில் புகார் வாக்குமூலம் பதிவு செய்து அன்றே நிலையம் வந்து நிலைய காவல்நிலைய கு.எண்.768/2021 பிரிவுகள் 294(b),323,324,506(2) இ.த.ச–வின் கீழ் வழக்கு பதிவு செய்துள்ளார். தற்போது என்னிடம் காட்டப்படும் முதல்தகவல்அறிக்கை அவர் தயார் செய்தது தான். **முதல் தகவல் அறிக்கை அ.சா.ஆ.3** ஆக குறியீடு செய்யப்படுகிறது. சம்பவயிடம் சென்று சம்பவயிட சாட்சிகள் அஜித்குமார், தங்கபாண்டி ஆகியோர் முன்னிலையில் சம்பவயிடத்தைப்பார்வையிட்டு பார்வைமகஜர் தயார் செய்து மாதிரிவரைபடம் வரைந்து சாட்சிகளிடம் கையொப்பம் பெற்றும், அவர்களை விசாரித்து வாக்குமூலம் பதிவு செய்தார். **மாதிரிவரைபடம் அ.சா.ஆ.4** ஆக குறியீடு செய்யப்படுகிறது. பின்பு பட்டியல் சாட்சிகள் 1 முதல் 5 வரையிலானவர்களை தனித்தனியாக விசாரித்து வாக்குமூலம் பதிவு செய்தார். பின்னர் எதிரிகளை தேடி வந்த நிலையில் எதிரி பாரதி என்பவரை

01.10.2021ம் தேதி 9.00 மணிக்கு அழகாபுரி அழகுநாச்சியம்மன்கோவில் அருகே கைது செய்து தக்க வழி காவல் மூலம் நீதிமன்ற காவலுக்கு அனுப்பி வைக்கப்பட்டார். பின்னர் எதிரிகள் மருதை, சதீஸ் குமார், மணிகண்டன் ஆகியோர்களை தேடி வந்த நிலையில் எதிரிகள் தலைமறைவாகி மாவட்ட அமர்வு நீதிமன்றத்தில் முன்பிணை பெற்று பிணையில் சென்றதால் கைது செய்யப்படவில்லை. பின்னர் காயம்பட்ட சண்முகவேல் என்பவருக்கு சிகிச்சையளித்த மருத்துவர் முருகேஷ்குமார் என்பவரை விசாரித்து விபத்து பதிவேடு உ/இ காயச்சான்று பெற்று வாக்குமூலம் பதிவு செய்தார். **விபத்து பதிவேடு உ/இ காயச்சான்று அ.சா.ஆ.5 ஆகக் குறியீடு செய்யப்படுகிறது.** பட்டியல் சாட்சி 1க்கு ஏற்பட்ட காயம் சாதாரண காயம் என சான்றளித்துள்ளார். பின்பு வழக்கின் விசாரணை முடித்து எதிரிகள் மீது பிரிவுகள் 294(b),323,324,506(2) இ.த.ச கீழ் 30.11.2021ம் தேதி குற்ற இறுதியறிக்கை தாக்கல் செய்துள்ளார்.

<u>எதிரிகள் தரப்பில் குறுக்குவிசாரணை</u>

2. நான் ஆவணத்தின் அடிப்படையில் தான் சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரிதான். அ.சா.1 கொடுத்த புகாரை முறையாக விசாரிக்காமல் காவல்நிலையத்தில் வைத்து ஆவணங்களை தயார் செய்து பொய்யான குற்ற இறுதியறிக்கை தாக்கல் செய்யப்பட்டுள்ளது என்றால் சரியல்ல. எதிரிகளுக்கும் இவ்வழக்கிற்கும் எந்த சம்பந்தமும் இல்லை என்றும், எதிரிகள் குற்றமற்றவர்கள் என்று சொன்னால் சரியல்ல.

M PONPANDI
Digitally signed by M PONPANDI
Date: 2026.06.18 17:40:54 +0530

நீதித்துறை நடுவர்,
பழனி.